1981 மார்ச் 3]

செய்ய வகை செய்வதற்கு, தலைமைக் குடிநீர் நிலையத்தில் ஜெனரேட்டர் ஒன்று வாங்கி பொருத்துவதற்கு அனுமதி அளிக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற நேரத்தில் மின் தட்டுப்பாடு காரணமாக ஜெனரேட்டர் வைப்பதற்கு அரசின் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். அதனுடைய மதிப்பீடு என்ன? அதைத் துரிதமாக வைப்பதற்கு அனுமதி வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் இந்த ஜெனரேட்டர் வாங்குவதற்கான திட்டமிருக்கிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக இயக்குநருக்கும், நகராட்சிகள் இயக்குநருக்கும் ஒப்புதலுக்காக இது ஏற்கனவே அனுப்பப்பட்டிருக்கிறது. உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

யானைக்கால் வியாதி.

*வினா எண் 348 : திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை சைதாப்பேட்டை தொகுதியில் யானைச் கால் வியாதி வேகமாகப் பரவி வருவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அதற்கான தீவிரமான தடுப்புத் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :—(அ) மற்றும் (ஆ) சென்னை சைதாப்பேட்டை தொகுதியில் தேசீய யானைக் கால் தடுப்புத்திட்டத்தை நிறைவேற்றுவதன்மூலம் யானைக் கால் வியாதி கட்டுப்பாட்டில் உள்ளது. இப்பகுதியில் 1973-ல் மைக்ரோ பைலேரியா 8.4 சதவிகிதமாகவும், 1974-ல் 9.5 சதவிகிதமாகவும் இருந்த மைக்ரோ பைலேரியா விகிதம் 1980-ல் 5.3 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. யானைக்கால் நோய் பரப்பும் கொசுக்களை ஒழித்தல், நோய் கண்டவர்களின் இரத்த மாதிரியை எடுத்து சோதனை செய்து அவர்களுக்கு மருந்து கொடுத்தல் தேசீய யானைக்கால் தடுப்புத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் பணிகளாகும்.